THE HON. SRI C. SUBRAMANIAM : இவைகளெல்லாம் குழந்தைகள் விளையாடுவதற்காக ஏற்பட்டவை. இதிலே ரொம்பவும் அபாயகரமான வெடிகளை எதுவும் தயாரிக்கக்கூடாது என்று இப்பொழுது உத்தரவு இருக்கிறது. சாதாரணமாக எந்த விதத்திலும் தீங்கிழைக்காத வெடிகளை தயார் செய்து குழந்தைகள் விளையாடுவதை நாம் தடை செய்யவேண்டாமென்று நான் நினைக்கிறேன்.

SRI A. GOVINDASWAMY NAYAGAR : தீபாவளி சமயத்தில் நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபொழுது அந்த நேரத்திலே தீபாவளி கொண்டாட்டத்திலே அவர் பட்டாசு வெடித்தாரா ?

DEPUTY SPEAKER : How is it relevant? I dissallow it.

SRI P. RANGASAMY REDDIAR : இதற்கு முன்பெல்லாம் ஓலை வெடி, யானை வெடி என்று காதிலுள்ள ஜவ்வுபிய்ந்து போகின்ற அளவிலே தயார்செய்யப்பட்டு வெடித்துவரப்பட்டது. இந்த வருஷத்தில் புது மாதிரியாக அணு குண்டு என்று ஒரு பட்டாசு தயார் செய்து அதை விற்று வருகிறார்கள். இம்மாதிரி பட்டாசுகள் வெடிக்கப்படுவதால் குழந்தைகளும் பெரியவர்களும் அநியாயமாய் மடிகிறார்கள். அதைத் தவிர இது சுகாதாரத்திற்கும் பெரிய இடைஞ்சலாகவும் மனிதர்களின் காது கொஞ்ச காலத்திற்காவது கூடிய வரையில் ரிபேர் இல்லாமல் பாதுகாக்கப்படக்கூடாத நிலைமையிலும் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இதை கண்டிப்பாக தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கு போடப்பட்டிருக்கிற கேள்வி பட்டாசு வெடிப்பதைப்பற்றி அல்ல. சட்ட விரோதமாக வெடி மருந்து சாலைகளை வைத்துக்கொண்டு அதிலிருந்து வெடிகளும் மற்ற சாமான்களும் செய்வதை தடுப்பதுபற்றி தான் கேள்வி. பட்டாசு வெடித்து விபத்து ஏற்படுவதைப்பற்றி கேள்வி அல்ல.

SRI S. R. ARUMUGAM : பட்டாசை வெடித்து காசை கரியாக்கும் நிலைமையை மாற்ற பட்டாசு உற்பத்தியையே தடை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியென்றால் சிகரெட் குடித்து காசை புகையாகச் செய்வதையும் கூட தடுக்கவேண்டும். இந்த விஷயங்களையெல்லாம் அவரவர்கள் இஷ்டத்துக்கு விட்டுவிடுவதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

Sale of crackers and colour matches

9-40 a.m. * 441 Q.—SRI P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the sale of crackers and colour matches has been prohibited in the Bazaar streets at Tiruchirappalli from 31st October 1956; and

(*b*) if so, the authority that issued the orders and the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sales-tax on coconut

* 442 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether coconut has been declared as an essential article of food by the Union Government;